ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.08.18 |

**பொதுமக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பு செய்வதற்கான/விற்பனை செய்வதற்கான பொதுமன்னிப்பு**

பொதுமக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வங்கித்தொழில் முறைமையினுள் கவர்ந்துகொள்ளும் பொருட்டு, வெளிநாட்டு நாணயத் தாள்களை உடமையில் வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆட்களுக்காக பின்வருவனவற்றுக்காக நிதி அமைச்சர் **2022.08.15 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் 1 மாத பொதுமன்னிப்புக் காலத்தினை** வழங்கும் கட்டளையொன்றினை வழங்கியுள்ளார்:

i. கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் ஏற்புடையவாறு **வைப்பிலிடுதல்; அல்லது**

ii. அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு (உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி) **விற்பனை செய்தல்**

மேற்குறித்தவை பற்றிய மேலதிகத் தகவல்களை கீழுள்ள வழிமுறைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்:

அ. ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினை அல்லது தேசிய சேமிப்பு வங்கியினைத் தொடர்புகொள்ளுதல்.

ஆ. **www.dfe.lk** என்ற வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக 2293/07 ஆம் இலக்க 2022.08.15ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான கட்டளையினைப் பார்வையிடுதல்.

இ. 011-2477255, 011-2398511 மற்றும் dfe@cbsl.lk ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினைத் தொடர்புகொள்ளுதல்